

# சீறத்துன்னபி ﷺ

## நாள் 14

# இன்றைய தலைப்புகள்

- பகுதி 1: கப்பாப் பின் அல்அரத் (ரலி) பட்ட துன்பங்கள்
- பகுதி 2: யாசிர் (ரலி), சுமையா (ரலி) மற்றும் அவர்களது மகன் அம்மார் (ரலி) பட்ட துன்பங்கள்
- பகுதி 3: ஷுஹைப் அர்ரூமி (ரலி) எதிர்கொண்ட துன்பங்கள்
- பகுதி 4: ஆரம்பகால ஸஹாபாக்கள் எதிர்கொண்ட இன்னல்களிலிருந்து நாம் கற்கும் பாடங்கள்

## பகுதி 1: கப்பாப் பின் அல்அரத் (ரலி) பட்ட துன்பங்கள்:

- இஸ்லாத்தைத் தழுவிய முதல் பத்து நபர்களில் கப்பாப் பின் அல்அரத் (ரலி) அவர்களும் ஒருவர். அவர் ஏமன் வம்சாவளியைச் சேர்ந்த ஓர் அரபு நாட்டின் அடிமை.

- அவருடைய எஜமானர் உம்மு அன்மார் என்ற பெண்மணி.

- கப்பாப் (ரலி) இரும்பை உருக்கி, போர்க்களத்தில் பயன்படுத்தப்படும் வாள்களை உருவாக்கும் திறன் பெற்றவர்.

- கப்பாப் (ரலி) இஸ்லாத்திற்கு மாறியதை அறிந்த உம்மு அன்மார், குரைஷிகள் சிலருடன் சேர்ந்து, கப்பாப் (ரலி) சுயநினைவை இழந்து ரத்தம் சிந்தும் வரை, அவரை அடித்து துன்புறுத்தினார்.

- கப்பாப் (ரலி) இரும்பை உருக்கி வாள்களை வடிவமைக்கும் போது, உம்மு அன்மார் அந்த சூடான இரும்பை எடுத்து, கப்பாப் (ரலி) முதுகில் சூடு வைத்து விடுவார்.



- ஒருமுறை நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த வழியே கடந்து சென்று கொண்டிருந்தபோது கப்பாப் (ரலி) அவர்களின் அலறல் சத்தம் கேட்டது.

- அப்போது உம்மு அன்மார் சூடான இரும்பை வைத்து கப்பாப் (ரலி) முதுகில் சூடு வைப்பதைக் கண்டார்கள்.

- நபி (ஸல்) அவர்கள் மிகவும் வேதனையடைந்து, ‘‘அல்லாஹ்வே, கப்பாபிற்கு

உதவி செய்வாயாக! அவரது எதிரியிடமிருந்து காப்பாயாக!'' என்று மனதார துவா செய்தார்கள்.

- சில நாட்களுக்குப் பிறகு, உம்மு அன்மாருக்கு ஒரு வகையான நோய் வந்தது; அதில் அவள் வெறிநாய் போல நடந்துகொண்டு, மூச்சிரைத்து, தன் வீட்டில் ஊர்ந்து கொண்டிருந்தாள்.

- அப்பகுதியில் இருந்த மருத்துவர்கள் அவளை சோதித்துவிட்டு, அவளது முதுகிலும், தலையிலும் 'காடரி' என்ற சூடு வைத்து தோல் எரிக்கும் சிகிச்சை ஒன்றே இதைக் குணப்படுத்த வழி எனக் கூறிவிட்டனர்.

- இது மிகவும் வேதனையான சிகிச்சையாகும். வேறு வழியில்லாததால், அதையே அவளுக்கு கொடுக்கப்பட்டது. இந்த வலிமிகுந்த சிகிச்சையால் அவள் மரணமடைந்தாள்.

- பல ஆண்டுகளுக்குப் பிறகு, உமர் (ரலி) கலீஃபாவாக இருந்தபோது, கப்பாப் (ரலி) அவர்களிடம் உம்மு அன்மாரைப் பற்றிக் கேட்டார்கள். கப்பாப் (ரலி) வெறுமனே சட்டையை தூக்கி முதுகைக் காட்டினார்கள். உமர் (ரலி) கூச்சலிட்டவாறே, ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! இது போன்ற எதையும் நான் இதற்கு முன் பார்த்ததில்லை!'', எனக் கூறினார்கள்.

- பின்னர் உமர் (ரலி) அவர்கள் கப்பாப் (ரலி) அவர்களுக்கு மரியாதை வழங்கும் நிமித்தமாக, அவர்களை தனது பக்கத்து இருக்கையில் அமர்த்தினார்கள்.

## பகுதி 2: யாசிர் (ரலி), சுமையா (ரலி) மற்றும் அவர்களது மகன் அம்மார் (ரலி) பட்ட துன்பங்கள்:

- ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் சித்திரவதை செய்யப்பட்ட மற்றொரு சம்பவம் யாசிர் (ரலி), அவரது மனைவி சுமையா (ரலி) மற்றும் அவர்களது குழந்தைகளான அப்துல்லா (ரலி) மற்றும் அம்மார் (ரலி) ஆகியோரின் வரலாறு.

- அவர்கள் நான்கு பேரும் அடிமைகளாக இருந்தவர்கள். அவர்கள் முன்னிலையிலேயே அவர்கள் அனைவரும் சித்திரவதை செய்யப்பட்டது, அவர்கள் பட்ட உடல் வலியை விட மோசமானது.

- ஒருமுறை நபி (ஸல்) அவர்கள் அவ்வழியாகச் சென்று கொண்டிருந்தபோது,

யாசிர் (ரலி) மற்றும் அவரது குடும்பத்தினர் சித்திரவதை செய்யப்படுவதைக் கண்ட அவர்களால் எதுவும் செய்ய முடியவில்லை.

- நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்விடம் துஆ செய்துவிட்டு உரத்த குரலில், ‘‘யாசிரின் குடும்பத்தா ரே! பொறுமையாக இருங்கள்! நிச்சயமாக உங்கள் இடம் சொர்க்கத்தில் உள்ளது’’ என்று கூறினார்கள்.

- கடுமையான சித்திரவதையின் விளைவாக யாசிர் (ரலி) கொடூரமாக கொல்லப்பட்டார். அவரது உடல் தெருக்களில் கயிறுகளால் இழுத்துச் செல்லப்பட்டதாகவும், குதிரைகளால் அவரது உடல் பிளக்கப்பட்டதாகவும் குறிப்புகள் உள்ளன.

- இந்த சம்பவம் அவரது மனைவி சுமையா (ரலி) அவர்களை மேலும் வேதனைப்படுத்தி, கோபத்தையும் ஏற்படுத்தியது, ஆனால் அவர்களுடைய ஈமான் மென்மேலும் அதிகரித்தது.

- இந்த சித்திரவதைகளுக்கு மூல காரணம் அபூஜஹ்ல்தான். அதனால் சுமையா (ரலி) அவனை வன்மையாக கண்டித்தார்.

- இதனால் கோபமடைந்த அபூஜஹ்ல் ஒரு ஈட்டியை எடுத்து அவர்களது கீழ் வயிற்றில் குத்தி அவர்களைக் கொன்றுவிட்டான்.

- யாசிர் (ரலி) அவர்களும், சுமையா (ரலி) அவர்களும் இஸ்லாத்தின் முதல் உயிர்தியாகிகளாக அறியப்படுகிறார்கள்.



- இவை அனைத்தும் அவர்களின் குழந்தைகளான அப்துல்லா மற்றும் அம்மார் முன்னிலையில் நடந்தது.

- காஃபிர்களின் அடுத்த இலக்காக அப்துல்லாவை நோக்கி திரும்பி, அவரை ஒரு பள்ளத்தில் தூக்கி எறிந்து கொன்றனர்.

- பின்பு அவர்கள் அம்மாரிடம் வந்த நேரத்தில், அவர் உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் மிகவும் சோர்வடைந்திருந்தார். அதனால் அவர்களிடமிருந்து தப்பிக்க குஃப்ர் (நம்பிக்கையின்மை) வார்த்தைகளை கூறிவிட்டார். பின்னர் காஃபிர்கள் அவரை விடுவித்து விட்டனர்.

- அப்போது அம்மாருக்கு சுமார் 15 வயது இருக்கும்.

- உடனே அம்மார் அழுது கொண்டே நபி (ஸல்) அவர்களிடம் விரைந்து வந்து, தான் குஃப்ரின் வார்த்தைகளை கூறிவிட்டதாகவும், அதற்கு பரிகாரம் என்ன செய்ய வேண்டும் என்றும் கேட்டார்.

- நபி (ஸல்) அவர்கள், ''உன் இதயத்தில் அல்லாஹ்வின் நம்பிக்கை இருக்கிறதா?'' என்று அவரிடம் கேட்டார்கள்.

- அதற்கு அம்மார், ''நாயகம் அவர்களே! எனக்கு எப்பொழுதும் போல் ஓர் இறைவனான அல்லாஹ்வின் மீதே நம்பிக்கை உள்ளது'' என்று பதிலளித்தார்.

- அதற்கு நபி (ஸல்) அவர்கள், ''நீ செய்ததில் எந்தத் தவறும் இல்லை. இனிமேல் இவ்வாறு நீ சித்திரவதைக்கு உட்பட்டால், இதே மாதிரியே நடந்து கொள்'' என்றார்கள்.

- பின்பு அல்லாஹ் குர்ஆனில் இந்த வசனங்களை அறிவித்தான்:

- ''எவருடைய உள்ளம் நம்பிக்கையைக் கொண்டு, அமைதி கொண்டிருக்கும் நிலையில் அல்லாஹ்வை மறுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டாரோ, அவர்மீது குற்றமில்லை''. – ஸூரா அந்நஹ்ல் (16: 106)

## பகுதி 3: ஷுஹைப் அர்ரூமி (ரலி) எதிர்கொண்ட துன்பங்கள்:

- மக்காவில் அப்துல்லா இப்னு ஜுடானின் அடிமையாக இருந்தவர் ஷுஹைப் அர்ரூமி. அப்துல்லா மற்றவர்களை விட இரக்கமுள்ள எஜமானராக இருந்தார்.

- ஷுஹைப் ஈராக்கைச் சேர்ந்தவர். ரோமானியர்களுக்கு அடிமையாக விற்கப்பட்டவர். அவர் ரோமில் இருந்து தப்பி மக்காவிற்கு வந்தார். அங்கு அவர் இப்னு ஜுடானால் பிடிக்கப்பட்டார்.

- ஷுஹைப் மிகவும் புத்திசாலி. அவர் இஸ்லாத்திற்கும் மாறியிருந்தார். இப்னு ஜுடான் அவரது புத்திசாலித்தனத்தை அடையாளம் கண்டு, அவரை தனது வணிக மேலாளராக ஆக்கினார். இதன் மூலம், ஷுஹைப் பெரும் செல்வந்தராகி விட்டார்.

- இப்னு ஜுடான் இறந்தபோது, ஷுஹைப் விடுவிக்கப்படவேண்டும் என்று தனது உயிலில் எழுதியிருந்தார்.

- இவ்வாறாக ஷுஹைப் விடுவிக்கப்பட்டு, சுதந்திரமாக ஆகிவிட்டார். நபி (ஸல்) அவர்களும், அ பூபக்கர் (ரலி) அவர்களும் ஹிஜ்ரத் செய்து மதீனாவில் குடியேறியபோது, இவரும் மக்காவிலிருந்து புறப்பட்டுவிட்டார்.

- அ வ்வாறு செல்லும்போது அவர் தனது செல்வத்துடன், குதிரையையும் அழைத்துச் சென்றார்.

- இதனை அறிந்த குரைஷிகள் அவரை பின்தொடர்ந்து வந்து, மக்காவுக்கு அருகிலுள்ள ஒரு பள்ளத்தாக்கில் அவரை சுற்றி வளைத்தனர்.

- இதைப் பார்த்த ஷுஹைப் அருகிலுள்ள மலையின் மீது ஏறி, தன் வில்லையும் அம்பையும் எடுத்து, அவர்கள் அனைவரையும் கொன்று விடுவதாக சபதம் செய்தார்.

- அதற்கு குரைஷிகள், ‘‘நீ பணமின்றி மக்காவிற்கு வந்தாய். இப்போது, இங்கிருந்து செல்வந்தராகப் புறப்படுகிறாய்’’ என்றார்கள்.

- ‘‘எங்கள் பணத்தை எங்களிடம் கொடுத்துவிடு; நாங்கள் உன்னை விட்டு விடுகிறோம்’’.



- அதற்கு ஷுஹைப், ''அப்படியானால் என் செல்வத்திற்காகத்தான் நீங்கள் என்னை பின்தொடர்கிறீர்களா?'' என்றார். அதற்கு அவர்கள் ''ஆம், நீ சவாரி செய்யும் குதிரையையும் சேர்த்துதான்'' என்றனர்.

- இப்போது ஷுஹைப் முன்பு இருந்தது, ஒன்று தனது செல்வத்துடன் மீண்டும் மக்காவிற்கே திரும்பிச் செல்லவேண்டும் அல்லது செல்வத்தை இழந்துவிட்டு மதீனாவிற்கு கால்நடையாக நடந்து சென்று நபி (ஸல்) அவர்களுடன் சேர்ந்து கொள்ளவேண்டும்.

- ஷுஹைப் தான் கொண்டுவந்த செல்வத்தை எல்லாம் அவர்களிடம் கொடுத்துவிட்டார். மக்காவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் புதைத்து வைத்திருந்த தனது செல்வத்தைப் பற்றியும் அவர்களிடம் கூறினார். மேலும் தனது குதிரையையும் அவர்களுக்கு வழங்கினார்.

- அதன் பின்பு ஷுஹைப் கால்நடையாக ஹிஜ்ரத்தை ஆரம்பித்தார். முழு ஹிஜ்ரத் பயணம் முழுவதையும் கால்நடையாக வந்த ஒரே ஸஹாபா ஷுஹைப் அவர்களே.

- அவர் மதீனாவுக்கு அருகில் உள்ள குபாவை அடைந்தபோது, மிகவும் களைத்துப்போய், முகம் முழுவதும் தூசி படிந்து, உடல் பலவீனத்துடன் கை, முழங்கால்களில் மூலம் ஊர்ந்த நிலையில் வந்தார்.

- அவர் குபாவை அடைந்ததும், நபி (ஸல்) அவர்கள் அவரை நேரில் வரவேற்று, அவருடைய முகத்தில் உள்ள தூசியைத் துடைத்து, அவருக்கு உணவும், நீரும் கொடுத்தார்கள்.

- பின்பு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிரித்துக்கொண்டே, ''உங்கள் வியாபாரம் மிகவும் வெற்றிகரமாக நடந்து விட்டது'' என்று கூறினார்கள்.

- அதைக்கேட்ட ஷுஹைப் ஆச்சரியப்பட்டு, ''யா ரஸூலல்லாஹ்! ஜிப்ரயீலைத் தவிர வேறு யாரும் உங்களிடம் இதை கூறியிருக்க முடியாது'' என்று பதிலளித்தார்.

- பின்னர் அல்லாஹ் ஸூரா அல்பகராவில் ஷுஹைப் செய்த செயல் பற்றிய அழகான வசனத்தை இறக்கினான்.

- ''இன்னும், அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடித் தன்னையே தியாகம் செய்பவனும் மனிதர்களில் இருக்கின்றான்; அல்லாஹ் (இத்தகைய தன்) அடியார்கள் மீது அளவற்ற அன்புடையவனாக இருக்கின்றான்''. – ஸூரா அல்பகரா (2: 207)

## பகுதி 4: ஆரம்பகால ஸஹாபாக்கள் எதிர்கொண்ட இன்னல்களிலிருந்து நாம் கற்கும் பாடங்கள்:

- நபி (ஸல்) அவர்கள் உட்பட ஆரம்பகாலத்தில் இஸ்லாத்தைத் தழுவியவர்களுக்கு ஏற்பட்ட கடுமையான சித்திரவதைகளைப் பார்க்கும்பொழுது, அல்லாஹ் ஏன் அவர்களை இத்தகைய கடுமையான துன்பங்களுக்கு உள்ளாக்கினான் என்ற கேள்வி எழுகிறது.

- அல்லாஹ் நாடியிருந்தால், நம் அன்புக்குரிய நபி (ஸல்) அவர்களுக்கும், அவர்களுடைய தோழர்களுக்கும் துன்பமில்லா வாழ்க்கையை கொடுத்து எளிதாக்கியிருக்க முடியும்.

- அதற்கான பதிலை ஸூரா அல்அன்கபூத்தின் முதல் சில வசனங்களில் காணலாம்.

- ''மனிதர்கள் – ''நாங்கள் நம்பிக்கை கொண்டிருக்கின்றோம்'' என்று கூறுவதனால் மட்டும் அவர்கள் சோதிக்கப்படாமல் விட்டுவிடப்படுவார்கள் என்று எண்ணிக்கொண்டார்களா?''

- ''நிச்சயமாக அவர்களுக்கு முன்னிருந்தவர்களையும் நாம் சோதித்திருக்கின்றோம்; ஆகவே, உண்மையுரைப்பவர்களை நிச்சயமாக

அல்லாஹ் அறிவான்; இன்னும், பொய்யர்களையும் அவன் நிச்சயமாக அறிவான்.'' - ஸூரா அல்அன்கபூத் (29: 2-3)

- ஸூரா அல்பகராவில் உள்ள மற்றொரு வசனத்தில், அல்லாஹ் கூறுகிறான்:

- ''உங்களுக்கு முன்னே சென்றவர்களுக்கு ஏற்பட்டதுபோல் (சோதனைகள்), உங்களுக்கு வராமலேயே சுவர்க்கத்தில் நீங்கள் நுழைந்துவிடலாம் என்று எண்ணுகிறீர்களா?''

- ''அவர்களை (வறுமை, பிணி போன்ற) கஷ்டங்களும் துன்பங்களும் பீடித்தன. ''அல்லாஹ்வின் உதவி எப்பொழுது வரும்?'' என்று தூதரும், அவரோடு நம்பிக்கை கொண்டவர்களும் கூறும் அளவுக்கு அவர்கள் அலைகழிக்கப்பட்டார்கள். அறிந்து கொள்ளுங்கள்! ''நிச்சயமாக அல்லாஹ்வின் உதவி சமீபத்திலேயே இருக்கிறது'' (என்று நாம் ஆறுதல் கூறினோம்). - ஸூரா அல்பகரா (2:214)

- கப்பாப் (ரலி) முதுகில் சூடான இரும்புக் கம்பிகள் வைத்து சித்திரவதை செய்யப்பட்டார்கள் என்பது பற்றி நாம் முன்பு பார்த்திருந்தோம்.

- ஸஹீஹுல் புகாரீயின் ஒரு ஹதீஸில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது: ஒருமுறை கப்பாப் (ரலி), நபி (ஸல்) அவர்களிடம் வந்து, ''எவ்வளவு காலம்தான் நாம் இந்த துயரங்களைத் தாங்கிக் கொள்ளவேண்டும்'' என்று கேட்டார்கள்.

- நபிகள்நாயகம்(ஸல்)அவர்கள், ''நிச்சயமாக, உங்களுக்கு முன்னிருந்தவர்கள், உங்களை விட அதிகமாகச் சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஆனால், அது அவர்கள் அல்லாஹ்வை வணங்குவதை எந்த விதத்திலும் தடுக்கவில்லை'' என்று கூறினார்கள்.

- ''நிச்சயமாக அல்லாஹ் இந்த மார்க்கத்தை முழுமைப்படுத்துவான். மேலும் ஒரு நாள் வரும்; அதில் ஒரு பெண் தனது ஆடுகளுடன் ஹத்ரமௌத்தில் இருந்து சனா வரை (ஏமனில் உள்ள இரண்டு தொலைதூர நகரங்கள்) நடந்து செல்வாள்; அவள் பயப்படுவது எல்லாம் அல்லாஹ்வுக்கும், தன் ஆட்டுமந்தையை தாக்க நினைக்கும் ஓநாய்களுக்கும் மட்டும்தான்''.

- இந்த வசனங்கள், ஹதீஸ் மற்றும் நபி வரலாற்றிலிருந்து, அல்லாஹ்வின் அருட்கொடைகள், சோதனைகள் மற்றும் போராட்டங்களிலிருந்து பெறப்பட்டவை என்பதையும், அவை வெறுமனே வந்துவிடவில்லை

என்பதையும் நாம் புரிந்துகொள்ள முடிகிறது.

- ஆரம்பகால முஸ்லிம்கள் எதிர்கொண்ட சோதனைகளை ஒப்பிடுகையில் நமது சோதனைகளும் போராட்டங்களும் மிக அற்பமானவை. இதற்காக நாம் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளோம். மேலும் அல்லாஹ் நமது சோதனைகளையும், போராட்டங்களையும் எளிதாக்க வேண்டும் என்று பிரார்த்திப்போம். ஆமீன்!